1 ஜூலை 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 13ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

## கிறிஸ்துவில் எல்லாருக்கும் எல்லாமானேன்

# இக்கட்டான நிலையில் நம்பிக்கையை நாடுவது

இன்று, சாலமோனின் ஞானம் 1:13 நமக்கு கூறுவது, 'சாவைக் கடவுள் உண்டாக்கவில்லை; வாழ்வோரின் அழிவில் அவர் மகிழ்வதில்லை.'

சாவிலும் அல்லது இக்கட்டான நிலையிலும், இது நம்பிக்கை அளிக்கிறது. வாழ்க்கையில் கொள்ளும் மனித நம்பிக்கை, இறுதியில் பரிதாபமான நிலைக்குக் கொண்டு செல்கிறது.

பெரும் நம்பிக்கை கொண்ட பெண்ணின் கதை இது. ஜெனி (உண்மையான பெயரல்ல) கடந்த மூன்று ஆண்டுகளாக மூத்திரக்குழாய் புற்றுநோயினால் அவதிப்படுகிறார். நோயை எதிர்த்துப் போராட வேண்டுமென்ற



மனஉறுதியுடன், இரண்டு முறை கிமியோதெரபியும் பல முறை ரடியோதெரபியும் செய்து கொண்டார். ஆயினும், புற்றுநோய் தீவிரமடைந்தது. தாங்க முடியாத வேதனையைத் தரும் அவரது நரம்புகளை அழுத்தும் கட்டியை அகற்ற அறுவைசிகிச்சையைச் செய்து கொள்ள வேண்டும் என ஜெனியிடம் கூறப்பட்டது.

தமது நம்பிக்கையை கைவிடும் எண்ணம் ஜெனிக்கு வந்ததுண்டா? ஆம், பலமுறை, காரணம் அவரது உடல் நிலையை அவரால் தாங்கி கொள்ள முடியவில்லலை. ஆயினும் உள்ளத்தளவில் அவர் மனஉறுதியோடு இருந்தார். வாழ வேண்டும் என்ற ஆசை இருந்தது. தமது இரண்டு மகன்களுக்கும் திருமணம் செய்து வைத்து, பேரப்பிள்ளைகளைக் கொஞ்ச வேண்டும் என அவர் விரும்பினார். தமது கணவருடன் வாழ்ந்த மகிழ்ச்சிகரமான தருணங்களைத் தொடர வேண்டும் என அவர் எண்ணங்கொண்டார். அதே வேளையில், அவர் அளித்த சாட்சியங்கள், பலரின் உள்ளத்தைத் தொட்டது.

அவரது துயரமான தருணங்களில், ஜெனி திருப்பாடல்களைச் செபிப்பார். பல திருப்பாடல்களை மனனம் செய்து வைத்திருக்கிறார். அவர் குறிப்பிட்ட திருப்பாடல்களில் செபிக்கிறார், 'ஆண்டவரே, உம்மை ஏத்திப் புகழ்வேன்; ஏனெனில், நீர் என்னைக் கைதூக்கி விட்டீர்'. மரணப் பயம், கடவுள் மீதான அவரது நம்பிக்கையைச் சீர்குலைக்க அனுமதிக்கவில்லை. அவரது உடல் வலி அவரை மிகவும் வாட்டும் போது, ஜெனி செபிப்பார், 'ஆண்டவரே, எனக்குச் செவிசாயும்; என்மீது இரங்கும்; ஆண்டவரே, எனக்குத் துணையாய் இரும்'. நம்பிக்கை சீடராக அவர் மிளிர்ந்தார்.

**நாமும், நம்பிக்கை சீடர்கள் என்ற முறையில், ஆண்டவரைப் பற்றிக் கொள்வோம்.** மாற்கு 5:21-43 இன்றைய நற்செய்தியில் பெயர் குறிப்பிடப்படாத அந்த பெண்ணைப் போல், ஆண்டவரை நாடி தொட வேண்டும். பன்னிரண்டு ஆண்டுகளாக இரத்தப்போக்கினால் அவள் அவதிப்பட்டாள். அவளைப் பார்த்த மருத்துவர் பலர், குணமளிக்கத் தவறி விட்டனர். நம்பிக்கையை கைவிடாது, கூட்டத்தோடு இயேசுவை அவள் பின்தொடர்ந்து கூறியது, 'நான் அவருடைய ஆடையைத் தொட்டாலே நலம் பெறுவேன்'. 'தொட்ட உடனே அவருடைய இரத்தப்போக்கு நின்று போயிற்று' என விவிலியம் கூறுகிறது.

இறுதியாக, யாயிர் மகளுக்கு உயிர்க் கொடுத்த இயேசுவின் அற்புதம், 'நமது மீட்பர் இயேசு கிறிஸ்து சாவை அழித்து, அழியா வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்தார்' என்ற உறுதிப்பாட்டை நமக்கு அளிக்கிறது. 'அஞ்சாதீர், நம்பிக்கையை மட்டும் விடாதீர்' என யாயிரிடம் இயேசு சொன்னதை நாமும் செவிமெடுப்போம். ✝

> வேதனைக்கு மத்தியில் நிதானமாகவும் துயரத்திற்கு மத்தியில் அமைதியாகவும் இருப்பவனே, ஏறக்குறைய நிறைவானவன்
>
> - புனித பிரான்சிஸ் டி சலஸ்

**வாரம் ஒரு வசனம்**

நாமும், நம்பிக்கை சீடர்கள் என்ற முறையில், ஆண்டவரைப் பற்றிக் கொள்வோம்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 26/2018

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

Print: Stenoprint Sdn Bhd
Design: The Mustard Seed Studio

# மினவுதல் மாதா தேவாலயம்

85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*

***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***

*2018 ஜூன் (ஆனி) மாதத்தின் கருப்பொருள்:*

***எடுத்து, பிட்டு கிறிஸ்துவில் கொடுங்கள்***

**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

## பங்கு அலுவலக நேரம்

திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 13ஆம் ஞயிறு** **சனி 30 -06-2018 - ஞாயிறு 08-07-2018**

சா.ஞா: 1: 13-15; 2: 23-24 தி.பா: 29: 2, 4, 5-6, 11-12a, 13b 2 கொரி: 8: 7-9, 13-15 மாற்கு: 5: 21 - 43

**"ஆண்டவரே, உம்மை ஏந்திப் புகழ்வேன். ஏனெனில் என்னைக் கைதூக்கிவிட்டீர்" - திபா 29**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 30 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித அல்போர்ட் / புனித வேபியன்) | விவிலியக் கல்வி (Bible Knowledge) : மதியம் 2.30 மணி<br>ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 01 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (பு.மொனிக்கா)<br>திருப்பலி (ஆ) (புனித யோசப் கப்புசீன்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15 |
| திங்கள் | 02 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 03 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 04 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 05 | 6.45 கா | திருப்பலி | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) புனித வனத்து சின்னப்பர் சிற்றாலயம் - ரஹாங்*** |
| வெள் | 06 | காலை திருப்பலி நடைபெறாது | | ***மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (ஆ) முதல் வெள்ளிக்கிழமை*** |

**<u>பொதுக்காலம் 14ஆம் ஞயிறு</u>**

எசே: 2: 2-5; 2: 23-24 தி.பா: 122: 1-2a, 2bcd, 3-4 2 கொரி: 12: 7-10 மாற்கு: 6: 1 - 6

**"ஆண்டவரே, எமக்கு இரங்கும் வரை, எம் கண்கள் உம்மையே நோக்கியிருக்கும்" - திபா 122**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 07 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(இளைஞர்கள்) | விவிலியக் கல்வி (Bible Knowledge) : மதியம் 2.30 மணி<br>ஆலய மண்டபம் மேல் அறை<br>**விவிலிய ஞாயிறு** |
| ஞாயிறு | 08 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) ( )<br>திருப்பலி (ஆ) (புனித அம்புறோஸ்))<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br><br>**விவிலிய ஞாயிறு** |

நம்முடைய **மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

## <u>2018 ஜூன்(ஆனி) மாத செய்திகள்/நிகழ்வுகள்</u>

**i) ஆலய காணிக்கை:**
23/24 ஜூன் 2018 ரிம: 18,004.40 (தேசிய நிதி திரட்டு)

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**ii) <u>இந்த வாரம் ஜூன்30/ஜூலை 1 திருப்பலிகளின் காணிக்கை பேதுருவின் காணிக்கைக்காக எடுக்கப்படும்.</u>** சமூக அக்கறைப் பணிக் குழுவினருக்கான காணிக்கை அடுத்த வாரம் இரண்டாவது காணிக்கையாக எடுக்கபட்டும்.

**மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்:**
அ) வின்செண்ட் சவரிமுத்து இறப்பு: 11-06-2018
ஆ) சுவாமிநாதன் செல்வம் இறப்பு: 25-06-2018
**<u>முடிவில்லாத ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக!</u>**

- **<u>திருமணம் புரிய இருப்போரின் கவனத்திற்கு:</u>** படிவத்தில் உங்களுடைய விவரங்களை முதலில் பதிவு செய்தபின் பங்கு குருவானவரைச் சந்தியுங்கள். (குறைந்தது ஒரு ஆண்டுக்கு முன்னர்) கடைசி நேர திட்டமிடலை தவிருங்கள்.
- **<u>VSPF - நடனத்துடன் கூடிய விருந்து</u>** (25-08-2018-சனி) டிக்கெட்டுகள் தொடர்புக்கு: மரியதாஸ் 06-7612 777) மார்ஜி (018-395 0546)
- **2018/2019 ஆம் ஆண்டுக்கான முதியோர் புகுமுக கிறிஸ்துவவகுப்புகள்** ஜூலை 8 ஆம் தேதி தொடங்கவுள்ளது. நம் திருச்சபையின் மேல் ஆர்வமுள்ளவர்களை இந்த வகுப்பிற்கு அழைத்து வாருங்கள். தொடர்புக்கு: லியோ: 013- 3977 639 அல்லது பங்கு அலுவலகம்.

**<u>திருமண அருளடையாள கொண்டாட்டம்</u>**
அ) குணசீலன் & எலிசபெத் பிரமீளா 30-06-2018 காலை 11.00 மணி
ஆ) ஜெயகுமார் & டெப்ரா தாட்சாயினி 07-07-2018 காலை 11.00 மணி

இன்று திருப்பலியை வழிநடத்திய அதிச வினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

- **நன்றிகள்: நமக்காகப் பணிபுரிந்து இப்போது காஜாங் செல்லவிருக்கும்** அருள்பணி:அண்ட்ரூ கூய் அவர்களுக்கு நம்முடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்வோம். உதவி பங்கு குருவாக வருகை தரவிருக்கும் அருள் பணி; சேவியர் அண்ட்ரூ அவர்களை நம் மத்தியில் வரவேற்போம்.
- **<u>170 ஆம் ஆண்டின் “காஃபி டேபிள்” புத்தக விற்பனை:</u>** புத்தகம் இப்போது விற்பனையில் உள்ளது. நம்முடைய 170 ஆண்டுகால வரலாறு இப்போது நம் கரங்களில் தவழ்வது நமக்கு ஒரு பெருமை. உங்களுக்கு ஒரு பிரதியை வாங்கும் வேளையில் வேறு இடங்களில் வசிக்கும் உங்களின் குடும்பங்கள் நண்பர்களுக்கு பரிசாக தாருங்கள். திருப்பலிக்குப் பின் ஆலய வளாகத்தில் மூன்று மையங்கள் அமைக்கப்பட்டிருக்கும். அங்கு உங்களுடைய பிரதியை வாங்கிக்கொள்ளலாம். மேலும் உங்களுக்குப் பிடித்த குருவானவருக்கு இதைப் பரிசளிக்க விரும்பினால், இந்த மையங்களுக்குச் சென்று அங்கிருக்கும் பெயர்பட்டியலில் உங்களுக்கு விருப்பமான குருக்களின் பெயர்களைத் தேர்வு செய்யுங்கள். இதற்கென உதவி செய்ய உதவியாளர்கள் இருப்பார்கள். அவர்களை நாடுங்கள்.
- 80 இளைஞர்கள் உறுதி பூசுதல் அருளடையாளம் பெற்றுக்கொள்ள இருக்கிறார்கள். நாள்:21-07-2018 மாலை 6.00 மணி. குருவானவர்கள் 29-30 ஜூன் (தேமொ/சீனம்/தமிழ்) மாணவர்களையும் 14-07-2018 அன்று ஆங்கிலம் பேசும் மாணவர்களையும் சந்திக்கின்றனர்.
  திருப்பலிக்கான ஒத்திகை: 08-07-2018 பகல் 2.00 மணி
  ஒப்புரவு அருளடையாளம்: 13-07-2018 வெள்ளி இரவு 8.00 மணி. வருகை கட்டாயம்.
- வவிலிய **ஞாயிறு: ஜூலை 8, 2018** - தியானிப்போம்.
  அ) உங்களின் வாழ்க்கையில் விசுவாசத்தையும், இறைவார்த்தையையும் கற்பித்த பெரியோர்கள், தலைவர்கள் யார்?
  ஆ) ஒரு இளைஞர் தம்முடைய விசுவாசப் பயணதைத் தொடர எது அடிப்படையான தேவையாக இருக்கிறது?
- **நம்முடைய அதிச ஒன்றுகூடலுக்கு முக்கியத்துவம் தருவோம்:** “ கிறிஸ்துவில் நான் எல்லாமும் ஆனேன்” விவிலியத்தை வாசித்து, தியானிப்போம். வாழ்வோம், விளிம்பு நிலையில் இருப்போருக்கும் சென்று பணி செய்வோம்.
- பாடல், வரவேற்புப்பணி மற்றும் மறை உரை: ஆன்மா மற்றும் தூதுரைப்பணிக்கு ஆன்மீக உணவு. பங்கு சமூகத்திற்கு சிறப்பானதைத் தர செபிப்போம்.
- திருமணமான தம்பதியருக்கு ஒரு நாள் கருத்தரங்கு: வழங்குவோர் மாமறை மாவட்ட குடும்ப வாழ்வுப் பணிக்குழுவினர். நாள்: 21-07-2018 (சனி) காலை 8.30 - 6.00 வரை. பெயர்களைப் பதிந்து கொள்ள பங்கு குடும்ப வாழ்வுப் பணிக்குழுவினரை தொடர்புகொள்ளவும். (ஜெரி 016-3205140, ஜூலி 016-3580702).

- மலேசிய குருக்களின் விசேச பேரவை: ஜூலை 16-20 (திங்கள்-வெள்ளி) ஜோகூர் பாரு , மாஜோடி செண்டரில் நடைபெறும். இந்நாட்களில் இறப்பு சம்பவங்கள் ஏதும் ஏற்பட்டால், வார்த்தை வழிபாடு நடைபெற ஏற்பாடு செய்யப்படும்.
- பங்கு மேய்ப்புபணி கூட்டம்: ஜூலை 12, 2018 (வியாழன்) இரவு 8.00 மணி பங்கு இல்லத்தில் நடைபெறும்
- பங்கு நிதிக்குழு கூட்டம்: ஜூலை 21,2018(சனி) காலை 11.00 மணி பங்கு இல்லத்தில் நடைபெறும்